## எறும்பில் கந்தாடை அண்ணன் (வரதராஜ தேசிகர்)

## வாழி திருநாமம்

தக்கானை இருசரணம் தனித் தொழுவோன் வாழியே
சகல கலைப் பொருள் அனைத்தும் சாற்றிடுவோன் வாழியே
மிக்கான கௌசி நகரில் மேவினோன் வாழியே
விருச்சிகத்தில் ஆதிரை நாள் விளங்க வந்தோன் வாழியே
எக்காலும் அண்ணன் அடி ஏத்துமவன் வாழியே
யதிராசன் பாஷியம் இங்கு எடுத்துரைப்போன் வாழியே
இக்காலம் என்னை ஈடேத்த வந்தோன் வாழியே
எறும்பில் கந்தாடை அண்ணன் இணை அடிகள் வாழியே

---